

ஆலந்தூர் கத்திப்பாரா அருகில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி ஒன்றிய பகுதி நகர பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணலில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு துவக்கி வைத்தார். அருகில் மாணவர் அணி இணை செயலாளர் பூவை சி.ஜெரால்டு, துணை செயலாளர் சேலம் ரா.தமிழரசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.



பொன்னேரியில் மறைந்த முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் உடலுக்கு தலைமைக் கழகம் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழகக் கொடி போர்த்தி அஞ்சலி செலுத்தினார். மாவட்டச் செயலாளர்கள் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., மற்றும் ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ. மற்றும் அண்ணா அறிவாலயம் மேலாளர் ஆர்.பத்மநாபன் உள்ளிட்டோர் உடனுள்ளார்கள்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக்

# கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

சென்னை, செப்.20

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (20.09.2024) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில், அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

பொருள்: 1. வருகிற செப்டம்பர் 28 அன்று காஞ்சிபுரத்தில் முதல்வர் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் கழக பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் குறித்து.

2. கழக வளர்ச்சி.



இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி - ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில, மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கேட்டுக்கொள்கிறார்.

### க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட

# ஒன்றிய - நகர - பகுதி- பேரூர் மாணவரணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர் நேர்காணல்!

## க.செல்வம் எம்.பி, – சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு! மு.குணசேகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், செப். 20-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், மாணவரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர் பொறுப்புக்கான நேர்காணல் இன்று நடைபெறுகிறது. இதில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. ஆகியோர் பகேற்கின்றனர். இது குறித்து காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் மு.குண சேகரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலில் கழக துணை பொது செயலாளர் ஆ.ராசா கண்காணிப்பில் கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ அறிவிப்பின் படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், மாணவரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளருக்கான நேர்காணல் இன்று 20.09.2024 வெள்ளிக்கிழமை காலை 9 மணி அளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகை மாவட்ட அலுவலகத்தில் நடைபெறுகிறது.

மாவட்டக் கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னிலை வகிக்கிறார்.

கழக மாணவரணி இணைச் செயலாளர் வழக்கறிஞர் சிஜெரால்டு, கழக மாணவரணி துணை செயலாளர் சேலம் ரா. தமிழரசன் ஆகியோர் ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், மாணவரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்பிற்கு விண்ணப்பித்தவர்களை நேர்காணல் செய்கின்றனர்.

மாவட்ட கழக செயலாளர் அறிவிப்பின்படி மேற்படி பொறுப்புகளுக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்களும் இந்த நேர்காணலில் வயது மற்றும் கல்வி சான்றுகளுடன் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மேற்படி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மு.குணசேகரன், துணை அமைப்பாளர்கள் டி.ராம்பிரசாத், ஏ.வி.சுரேஷ்குமார், சரளாதனசேகரன், எஸ். தமிழ்செல்வன், சு.சரண்ராஜ் ஆகியோர் செய்கின்றனர்.

இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில்

# 175 பேருக்கு நிபா வைரஸ் காய்ச்சல்! பள்ளி, கல்லூரிகள் மூடல்!

மலப்புரம், செப்.20-

கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் 175 பேருக்கு நிபா வைரஸ் காய்ச்சல் பரவியுள்ளது. இதனால்பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டு மண்டலங்கள் அறிவிக்கப்பட்டு நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் நிபா வைரஸ் காய்ச்சல் பரவிவருகிறது. இங்கு 175 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. இதில் 74 பேர் சுகாதார பணியாளர்கள். இது குறித்து கேரள சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் கூறியதாவது:

நிபா வைரஸ் காய்ச்சல் பாதிப்புக்கு உள்ளானவர்களில் 126 பேர் தீவிர பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். 49 பேருக்கு லேசான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 104 பேருக்கு தீவிரசிகிச்சை அளிக்கப்படுகிறது. மாஞ்சேரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 10 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். 13 பேரின் ரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப் பட்டுள்ளன.

நிபா வைரஸ் பாதிப்புக்கு உள்ளானவர்களின் வீட்டை சுற்றி 3 கி.மீ தூரத்தில் வசிப்பவர்களுக்கு காய்ச்சல் உள்ளதா என்பதை பரிசோதிக்க 66 குழுக்களை சுகாதாரத்துறை அமைத்துள்ளது.

மலப்புரம் மாவட்டத்தில் 2 பஞ்சாயத்துகளில் உள்ள 5 வார்டுகள்கட்டுப்பாட்டு மண்டலங்களாகஅறிவிக்கப்பட்டுள்ளன. மக்கள் அதிகளவில் கூட வேண்டாம் எனஅறிவுறுத்தப் பட்டுள்ளது. கட்டுப்பாட்டு மண்டலங்களில் உள்ள கடைகளை மாலை 7 மணிக்கு அடைக்கும்படி மாவட்ட அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். அதேபோல் இங்குள்ள பள்ளி, கல்லூரிகள், சினிமாதி யேட்டர்கள், மதரஸாக்கள், அங்கன்வாடிகள், டியூஷன் மையங்கள் ஆகியவற்றை மூடவும் உத்தர விடப்பட்டுள்ளது.

மக்கள் முககவசம் அணியும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். திருமணம், துக்க நிகழ்ச்சிகளில் அதிகம் பேர் பங்கேற்க வேண்டாம்எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுஉள்ளனர். இவ்வாறு அமைச்சர் வீணா ஜார்ஜ் கூறினார்.



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஏற்பாட்டில், 2024ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான சென்னை மண்டல அளவிலான கல்லூரி மாணவர் மற்றும் மாணவியர் இடையே சென்னை–ஜவஹர்லால் நேரு வெளி விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ஜூடோ மற்றும் வாள்வீச்சுப் போட்டிகளைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தொடங்கி வைத்தார்.

### 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான

# யோகா - இயற்கை மருத்துவ தரவரிசைப் பட்டியல்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்!

சென்னை, செப்.20

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் சென்னை, அரும்பாக்கம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் அலுவலகத்தில் 2024-25-ஆம் ஆண்டிற்கான யோகா மற்றும் இயற்கை மருத்துவ பட்டப்படிப்பு தரவரிசை பட்டியலினை வெளியிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

2024-25ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரிகளில் உள்ள BNYS (Bachelor of Naturopahty and Yoga Science) இளங்கலை மருத்துவப்பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கைக்கு தரவரிசைப் பட்டியல் இன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

அரசு மற்றும் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2320. இதில் தகுதியான மாணவர்களின் விண்ணப்பங்கள் 2243, தரவரிசைப் பட்டியலில் முதல் மதிப்பெண் 198.50, முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த அப்சர் பேகம், நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1187, இதில் தகுதியான மாணவர்களின் விண்ணப்பங்கள் 1173, தரவரிசைப் பட்டியலில் முதல் மதிப்பெண் 195, முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயசிவனந்தா, அரசு மற்றும் சுயநிதி கல்லூரிகள் மற்றும் அதனுடைய இருக்கைகளின் விவரங்களைப் பொறுத்தவரை அரசு மருத்துவக்கல்லூரிகள் 2ம், அதில் 160 இடங்களும் உள்ளன.

சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரிகளைப் பொறுத்தவரை 16 உள்ளது, அதில் அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 960, நிர்வாக ஒதுக்கீட்டிற்கான இடங்கள் 540, மொத்த இடங்கள் 1,660. மேற்படி இடங்களுக்கான கலந்தாய்வு 23.09.2024 அன்று தொடங்கப்படவுள்ளது.

23.09.2024 அன்று சிறப்பு பிரிவினருக்கும், 24.09.2024 அன்று பொதுப்பிரிவினருக்கும் 26.09.2024 மற்றும் 27.09.2024 ஆகிய நாட்களில் நிர்வாக ஒதுக்கீட்டு பிரிவினருக்கும் கலந்தாய்வு நடைபெறவிருக்கிறது. அந்த வகையில் இந்த பட்டியல் தற்போது வெளியிடப்பட்டிருக்கிறது.

### சித்த மருத்துவப் பல்கலைக்கழகம்

இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு திட்டங்கள் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் சென்னையில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்கின்ற கோரிக்கையினை ஏற்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த மசோதா தற்போது வரை ஆளுநரால் ஒப்புதல் அளிக்கப்படாமல் உள்ளது. ஆளுநர் ஒப்புதல் அளித்தவுடன் தமிழ்நாட்டில் ஒரு சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பல்கலைக்கழகத்தினை பொறுத்தவரை மாதவரம் பால்பண்ணை அருகே 25 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு அந்த இடமும் தயார் நிலையில் இருக்கிறது. மேலும் முதலமைச்சர் தான் பல்வேறு பல்கலைக்கழகங்களில் ஏற்கனவே முன் மாதிரியாக இருக்கிறது, குஜராத் போன்ற மாநிலங்களில் கூட பல்வேறு பல்கலைக்கழகங்களில் முதல்வர்களே வேந்தர்களாக இருக்கிறார்கள்.

அந்த வகையில் தமிழ்நாட்டில் புதிதாக தொடங்கப்படுகிற இந்த சித்த மருத்துவ பல்கலைக் கழகத்துக்கு ஏற்கனவே மறைந்த ஜெயலலிதா அம்மையார் முதல்வராக இருந்தபோது கூட இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு அவர் வேந்தராக இருந்திருக்கிறார்.

எனவே சித்த மருத்துவ பல்கலைக்கழகத்தில் வேந்தராக முதல்வரும், இணை வேந்தர், துணை வேந்தர் பொறுப்புகள் என்கின்ற வகையில் அறிவிக்கப்பட்டு சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டது. அதில் அவருக்கு விருப்பமில்லாத நிலையில் தொடர்ந்து இந்த காலதாமதம் என்பது நீடிக்கப்பட்டு இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை இயக்குநர் மு.விஜயலட்சுமி, இணை இயக்குநர்கள் மரு.பார்த்திபன், மரு.மணவாளன், தேர்வுக்குழு செயலாளர் மரு. கிருஷ்ணவேணி, மாமன்ற உறுப்பினர் ராணி ரவிச்சந்திரன் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நே.சிற்றரசு – தயாநிதி மாறன் – அன்பகம் கலை – சிறப்புரை!

# 117வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம்!

## மருத்துவர் நா.எழிலன் பங்கேற்பு! எஸ்.சத்தியபெருமாள் அறிக்கை!

சென்னை,செப். 20-

117-வது வட்டக் கழகச் செயலாளர் எஸ். சத்திய பெருமாள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 117வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் இன்று (20.09.2924 வெள்ளிக் கிழமை) மாலை 5.00 மணியளவில் கிரியப்பா சாலை, சமூக நலக்கூடம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், விளையாட்டு மேம்பாட்டு செயலாளர் தயாநிதிமாறன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் நா.எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புரை, மருத்துவ அணி மாநில துணை செயலாளர் டாக்டர் கலை கதிரவன் தலைமை கழக வழக்கறிஞர் கே.ஜெ.சரவணன் மற்றும் பி.திருமலை எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர்: வி.எஸ்.ராஜ், பொதுக் குழு உறுப்பினர்: பா.இராபர்ட் மாவட்ட நிர்வாகிகள்: து.விக்டர், வி.எஸ்.கலை, ஆர்.என்.துரை ஏ.சங்கீதா, ஜே.எஸ்.அகஸ்டின் பாபு பகுதி நிர்வாகிகள்: எம்.ஆர். ஜம்பு லிங்கம், கோ.ரவி, எம். வெங்கடேசன், டி.வைலட் மேரி, டி.ஜெயக்குமார் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்: பா.பிரகாஷ், துபாய் வி.ஆர். விஜய், சுலோச்சனா ராமு, ஜே.எம்.எச்.இம்ரான், நா. அசோகன், சி.புலான்ராஜ், எஸ்.ரமேஷ், கே.வாசுதேவன், கி.தம்பிதுரை , வீ. ஆனந்த்குமார், பி. ராஜேஸ்வரி, பிரசன்ன ராஜகுமாரி, கே.ரேணுகா, ஆர்.டி.குமரன். 117வது வட்ட நிர்வாகிகள்: க.செல்வராஜ், ஏ.கிரி, ரா.பரமேஸ்வரன், டி.இந்திராணி மா. பழனி, டி. ராஜேந்திரன், என்.சுமன், எஸ்.சுப்பிரமணி, ஆர்.கவிமணி, பி.பாலாஜி, கே.பி.வினோத். ப.கதிரவன், பி.செல்வி, டி. புஷ்பா, பி.பரிமளா தேவி, எஸ்.பிரபாவதி, டி.தனலட்சுமி, பாக முகவர்கள்: எஸ். பிரதாப், எம்.மேகநாதன், கா.பிரகாஷ், ஜி.தியாகு, ஆர். ரஜினி, ஆர்.டி.முருகன், ஆர். ஸ்ரீதர், எஸ்.ராஜ்குமார், எம். கிருஷ்ணமூர்த்தி, கே.அருண்குமார், பி.கோபி, எஸ்.ரஞ்சனி உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும். கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

இ.பொ.து.தெ.வா.ப.ந.க.எண்.தெ1/213/2024

**குறுகிய கால மின்னணு ஒப்பம்**

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

| கோப்பு எண் | பணியின் விவரம் | முன் வைப்பு தொகை |
|---|---|---|
| தெ1/213/2024 | பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 11 முதல் 15, வரையில் உள்ள ஐந்து லாரி நிலையங்களுக்கு 120 நாட்களுக்கு 30 ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவது (ஒப்ப விதிகளின் படி) | ரூ.44,500/- |

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 30.09.2024 மதியம் 3.00 மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 01.10.2024 மதியம் 3.15 மணி
மேலும் விபரங்களுக்கு : https://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 3793 / ஒப்பந்தப்புள்ளி / 2024

மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)




தி.மு.கழக 75வது ஆண்டு பவளவிழாவை முன்னிட்டு 76 அ வட்டத்தில் முதற்கட்டமாக இல்லம் தோறும் கழக கொடியினை ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. ஏற்றிவைத்து இனிப்பு வழங்கினார். உடன் எம்.சாமிகண்ணு, தமிழ்ச்செல்வி, வட்டச் செயலாளர்கள் எஸ்.வெங்கடேசன், எஸ்.சசிகுமார் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.